## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

### மானியக் கோரிக்கை எண்–42

# அறிவிப்புகள்
# 2013–2014

**திரு.கே.பி.முனுசாமி**

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,

நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

# அறிவிப்புகள்

## 1. புதிய பேருந்து நிலையங்கள்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, 2013–14 ஆம் ஆண்டில், மக்கள் தொகை அதிகமுள்ள ஊரகப் பகுதிகளிலும், முக்கிய சந்திப்புகளிலும், பயணிகள் நிழற்கூடம், கழிப்பறை, குடிநீர் வசதி, கடைகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் அமையப்பெற்ற, **ஒவ்வொன்றும் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16 புதிய பேருந்து நிலையங்கள் 16 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் கீழ்க்கண்ட ஊராட்சிகளில் கட்டப்படும்.**

| வ.எண். | மாவட்டம் | ஊராட்சி |
|---|---|---|
| 1. | கடலூார் | பெரியாகுறிச்சி |
| 2. | விழுப்புரம் | திருவக்கரை |
| 3. | கிருஷ்ணகிரி | தளி |
| 4. | கிருஷ்ணகிரி | சூளகிரி |
| 5. | தர்மபுரி | பஞ்சப்பள்ளி |
| 6. | ஈரோடு | லக்காபுரம் |
| 7. | நீலகிரி | உள்ளட்டி |
| 8. | நாமக்கல் | எடப்புளிநாடு |
| 9. | திருப்பூர் | கோடங்கிபாளையம் |

| | | |
|---|---|---|
| 10. | கரூர் | தோகைமலை |
| 11. | திண்டுக்கல் | செந்துறை |
| 12. | இராமநாதபுரம் | ஏர்வாடி |
| 13. | விருதுநகர் | ஆலங்குளம் |
| 14. | தூத்துக்குடி | தருவைக்குளம் |
| 15. | திருநெல்வேலி | வீரகேரளம்புதூர் |
| 16. | கன்னியாகுமரி | தடிக்காரன்கோணம் |

## 2. மண், சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலைகளாக மேம்படுத்துதல்

2012–13ஆம் ஆண்டில், ஊரகப்பகுதிகளில் உள்ள 5,200 கி.மீ. நீளமுள்ள மண் மற்றும் சரளைச் சாலைகள் அனைத்து பருவ காலத்திற்கும் ஏற்றவைகளாக மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டன. **2013–14ஆம் ஆண்டிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் 9,235 கி.மீ நீளமுள்ள மண், சரளை மற்றும் கப்பிச் சாலைகள் தார் சாலைகளாக மேம்படுத்தப்படும்.**

## 3. அனைத்து ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் சேவை மையங்கள் அமைத்தல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 12,524 கிராம ஊராட்சிகளிலும், 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் சேவை மையங்கள் கட்டப்படும். இச்சேவை மையங்களில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் பற்றிய தகவல்களும், முழு சுகாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார திட்டங்களை ஊராட்சி அளவிலும், ஊராட்சி ஒன்றிய அளவிலும் செயலாக்கம் செய்யும் அலுவலகங்களும் அமையப்பெறும். **முதற்கட்டமாக 2013–14ம் ஆண்டில், தலா 10 இலட்சம் ரூபாய் செலவில் 4,000 ஊராட்சி சேவை மையங்கள் மற்றும் தலா 25 இலட்சம் ரூபாய் செலவில் 120 ஊராட்சி ஒன்றிய சேவை மையங்கள் 430 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

4. **2015–ல் தமிழகத்தை திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற மாநிலமாக மாற்றுதல் தொடர்பாக பெருமளவிலான விழிப்புணர்வு இயக்கம் மற்றும் மாநில அளவிலான சுகாதார விழிப்புணர்வு குழுமத்தின் செயல்பாட்டினை தீவிரப்படுத்துதல்.**

**அ.** தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை 2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ள பத்து முக்கிய அம்சங்களில் ஒன்றாக ஒட்டுமொத்த குடிநீர் மற்றும் சுகாதாரச் சேவையை பூர்த்தி செய்ய வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். **மேலும், 2015 க்குள் தமிழகத்தை திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக மாற்ற வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**ஆ. அதனடிப்படையில், 2015 ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தை திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக ஆக்குவதற்கு வேண்டிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மிகப்பெரிய அளவில் தமிழ்நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும்.** இந்நடவடிக்கைகளை

வலுப்படுத்தும் விதமாக 2006 ஆம் ஆண்டு முதல் செயல்பாடற்று இருக்கும் தமிழ்நாடு சுகாதார விழிப்புணர்வு குழுமம் மீண்டும் புனரமைக்கப்படும்.

**இ.** இதற்கெனத் தேவையான வலுவான நிறுவன அமைப்புகள் ஏற்படுத்தும் விதமாக மாவட்ட அளவில் குடிநீர் மற்றும் சுகாதார துணை மையங்களும், வட்டார வள மையங்களும் 2013–14 ஆம் ஆண்டில் அமைக்கப்படும். **இதற்கு 11 கோடியே 89 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 5. நீலகிரி, இராமநாதபுரம், கடலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கூடுதலாக புதிய ஊராட்சி ஒன்றியங்களை ஏற்படுத்துதல்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் டிசம்பர் 2012ல் நடத்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களது மாநாட்டில், தேவைப்படும் மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றியங்களையும், ஊராட்சிகளையும் பிரித்து மக்கள் பயன்பெறும் வண்ணம் நடவடிக்கையெடுக்க ஆணையிட்டார்கள். அதனடிப்படையில், நீலகிரி மாவட்டத்திலுள்ள 35 கிராம ஊராட்சிகளை 95 கிராம ஊராட்சிகளாக மறு சீரமைக்கவும், 4 ஊராட்சி ஒன்றியங்களை 6 ஊராட்சி ஒன்றியங்களாக பிரிக்கவும் ஆணையிட்டுள்ளார்கள். அதே போல, **மக்களின் வசதிக்காகவும், நிர்வாக நலனுக்காகவும், 2013–14 ஆம் ஆண்டில், புதிய ஊராட்சி ஒன்றியங்கள் பின்வருமாறு ஏற்படுத்தவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

1. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கடலாடி, கமுதி மற்றும் முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, சிக்கல் என்ற புதிய ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்தப்படும்.

2. கடலூர் மாவட்டத்திலுள்ள காட்டுமன்னார் கோயில், கீரப்பாளையம் மற்றும் கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, ஸ்ரீமுஷ்ணம் என்ற புதிய ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்தப்படும்.

3. கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள தளி மற்றும் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, அஞ்செட்டி என்ற புதிய ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்தப்படும்.

4. கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள காவேரிப் பட்டினம், பர்கூர் மற்றும் மத்தூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து போச்சம்பள்ளி என்ற புதிய ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்தப்படும்.

புதிய ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகள் 2016 முதல் முழு அளவில் சட்டப்படி செயல்பட ஏதுவாக கட்டடங்கள் மற்றும் ஏனைய பணிகள் தற்போது நிறைவேற்றப்படும். புதிய அலுவலகங்களுக்கு தேவைப்படும் பணியாளர்களும் நியமிக்கப்படுவார்கள்.

## 6. ஊராட்சிகளை வகைப்படுத்த உயர்நிலைக் குழு அமைத்தல்

மக்கள் தொகை, வருவாய் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு அருகாமை ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சிகளை வகைப்படுத்தி, அதற்கிணங்க தேவையான கூடுதல் அலுவலர்கள் மற்றும் வசதிகளை ஏற்படுத்துவது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு உரிய பரிந்துரைகளை அளித்திட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ஓர் உயர்நிலைக்குழு அமைக்கப்படும்.

## 7. மாவட்ட அளவில் ஊராட்சி நிர்வாகத்தை மேம்படுத்த கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்துல்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ள மாவட்டங்களில், ஊராட்சி நிர்வாகத்தினை செம்மைப்படுத்தும் முயற்சியாக, 500 கிராம ஊராட்சிகளுக்கும் அதிகமாக உள்ள திருவள்ளூர், தஞ்சாவூர், காஞ்சிபுரம், கடலூார், வேலூார், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு மாவட்டங்களில் கூடுதலாக ஒரு உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் ஒரு உதவி இயக்குநர் (தணிக்கை) ஆகியோா் நியமிக்கப்படுவர். இந்த அலுவலகங்களுக்குத் தேவையான கூடுதல் பணியாளர்களும் நியமிக்கப்படுவர்.

## 8. ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்தினை வலுப்படுத்த கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்தல்

சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு ஊராட்சி ஒன்றியம், 1985 ஆம் ஆண்டு பேரூராட்சியாக மாற்றப்பட்டு, மீண்டும் 1997 ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றியமாக செயல்பட்டு வருகிறது. ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதரப்படிகள் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும் என 1997 ஆம் ஆண்டில் அப்போதிருந்த அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து 58 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் செலவிடப்படுவதால் மக்களுக்குத் தேவையான அவசியப் பணிகளை ஊராட்சி ஒன்றியத்தால் நிறைவேற்ற இயலவில்லை. ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி இல்லாத நிலையில் பணியாளர்களின் ஊதியம் வழங்குதல் மற்றும் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** 2013–14 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 9. கலப்பு ஆற்றல் (Hybrid Power) மூலம் நீரேற்றும் நிலையங்கள் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல்

தூத்துக்குடி மாவட்டத்தில் பகுதி–2 திட்டத்தின் கீழ் கலப்பு ஆற்றல் (Hybrid Power) மூலம் நீரேற்றும் நிலையங்கள் மற்றும் எதிர் பரவு சவ்வூடு முறையில் செயல்படும் கலன்கள் (Reverse Osmosis Plant) 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

## 10. முற்றிலும் கழிவு வெளியேறாத 14 ஒருங்கிணைந்த பசுமை சுகாதார வளாகங்களை அமைத்தல்.

தூய்மை கிராம இயக்கம், மகளிர் சுகாதார வளாகம், ஆண்கள் சுகாதார வளாகம், தனி நபர் இல்லக் கழிப்பறைகளை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசின் கூடுதல் தொகை போன்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக, சுகாதாரப் புரட்சியை மீண்டும் ஏற்படுத்த, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** அதன் தொடர்ச்சியாக, 2013–14 ஆம் ஆண்டில், சுகாதார வரலாற்றில் புதிய தொழில்நுட்ப அணுகுமுறையாகக் கருதப்படும் உயிரிச்செரிமானம் (Bio-digester) உடன் ஒருங்கிணைந்த 14 பசுமை சுகாதார வளாகங்கள் 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 11. தொழில் திறன் பெற்ற கிராமப்புற இளைஞர்களுக்குவேலைவாய்ப்பு பெற்றுத்தர 100 வேலைவாய்ப்பு முகாம்கள்.

ஊரகப் பகுதிகளில் உள்ள தகுதி பெற்ற இளைஞர்கள் இலாபகரமான வேலைவாய்ப்பினைப் பெற, தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுடன் அவர்களை இணைக்கும் வகையில், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, 2013–14 ஆம் ஆண்டில், ஒரு மாவட்டத்திற்கு 3 என மொத்தம் 100 வேலைவாய்ப்பு முகாம்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 25 லட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

**12. புது வாழ்வு திட்டம் செயல்படும் 15 மாவட்டங்களில் உள்ள 70 ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டமைப்பை அமைத்து வலுப்படுத்துதல்.**

புது வாழ்வு திட்ட செயல்பாடுகளின் மூலம் இதுவரை பெற்ற பயன்கள் நீடித்து நிலைத்திட, அரசு துறைகள் மற்றும் பிற நிறுவனங்களோடு தொடர்புகளை ஏற்படுத்திட உயர்நிலை கூட்டமைப்புகள் வட்டார அளவில் அமைக்கப்படும்.

இந்நோக்கத்திற்காக, உயர்நிலை கூட்டமைப்புகள் வட்டார மகமை என்ற பெயரில் புது வாழ்வு திட்டம் செயல்படும் 15 மாவட்டங்களில் உள்ள 70 வட்டாரங்களில் தோற்றுவிக்க, துவக்க நிதியாக, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இந்த ஆண்டு 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 13. சர்வதேச மற்றும் தேசிய அளவில் புது வாழ்வு திட்டத்தின் சிறந்த செயல்பாடுகளை பகிர்ந்து கொள்ள "புது வாழ்வு மாநில வள ஆதார கற்றல் மையம்" உருவாக்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2005 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட புது வாழ்வு திட்டம் சர்வதேச அளவிலும் தேசிய அளவிலும் ஒரு சிறந்த முன்னோடித் திட்டமாக விளங்குகிறது. திட்டத்தின் செயல்பாடுகளை மற்ற மாநிலங்கள் மற்றும் நாடுகளோடு பகிர்ந்து கொள்ள **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** மாநில புது வாழ்வு சங்கத்தின் கீழ், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம், 20 இலட்சம் ரூபாய் துவக்க நிதியாகப் பெற்று 2013–14ல் "புது வாழ்வு மாநில வள ஆதார கற்றல் மையம்" ஏற்படுத்தப்படும்.

## 14. புது வாழ்வு திட்ட மாவட்டங்களில், 4,170 இளைஞர் பிரதிநிதிகள் இளைஞர் வழிகாட்டிகளாக நியமனம்

26 புது வாழ்வு திட்ட மாவட்டங்களில் உள்ள 4170 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் மூலம் இளைஞர் பிரதிநிதிகளை தேர்வு செய்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பு குறித்த செய்திகள் மட்டும் அல்லாமல் எச்.ஐ.வி/எய்ட்ஸ், மதுப்பழக்கம், போதைக்கு அடிமை, புகைபிடித்தல் மற்றும் பாலினக் கேடுகள் ஆகியவை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த பயிற்சி அளித்து இளைஞர் வழிகாட்டிகளாக நியமிக்கப்படுவர். **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 1 இலட்சத்து 50 ஆயிரம் கிராமப்புற இளைஞர்களுக்கு, 2013–14ஆம் ஆண்டு, 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பின்வரும் திட்டங்கள் செயல்படுத்துதல்.**

**15.** தமிழக தொலை நோக்கு திட்டம் 2023–ல் குறிப்பிட்டுள்ள மனித வள மேம்பாடு மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை மையமாகக் கொண்டு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் திட்ட உதவியுடன் 100 நுண் தொழில்கள் ஏற்படுத்தப்படும்.

**16.** 1500 வேலையில்லா இளைஞர்களின் திறனை மேம்படுத்த 2 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கப்படும்.

17. 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய ஆறு கடலோர மாவட்டங்களில் செயற்கை பவளப்பாறைகள் அமைக்கப்படும்.

18. 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஆறு மீன் இறங்கு தளங்கள் கட்டித் தரப்படும்.

## 19. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் புதிதாக சட்ட அலுவலர் பதவி ஏற்படுத்துதல்.

திட்ட செயலாக்கம், பணியமைப்பு மற்றும் ஊராட்சி நிர்வாகம் தொடர்பான பல்வேறு வழக்குகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் ஆகியோரைப் பிரதிவாதியாகக் கொண்டு நிலுவையில் உள்ளன.

இவ்வழக்குகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்கும், அரசு வழக்கறிஞர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வழக்குகளை விரைந்து நடத்துவதற்கும், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது ஆணைப்படி**, ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தில் புதிதாக சட்ட அலுவலர் பதவி உருவாக்கப்படும்.

## 20. இயக்ககத்திற்கு புதிய வாகனங்கள் வழங்குதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் பணிபுரியும் முதன்மை கணக்கு அலுவலர் மற்றும் நிதி ஆலோசகர் மற்றும் கூடுதல் இயக்குநர்களுக்கு பழைய வாகனங்களை கழிவு செய்து, மூன்று புதிய வாகனங்கள் 21 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

**திரு.கே.பி.முனுசாமி**

**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,**

**நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**